வைகாசி - ஆனி 2022

# நீங்களும் எழுதலாம்

நீங்கள் -06 எழுத்து -32

32



தடைகளைத் தகர்த்து

தகவுகளைத் தேடி

இருமாத கவிதை இதழ்

NEENKALUM EZHUTHALAM
(Poetry Magazine)

விலை 100/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களும் எழுதலாம் - 32

மே - ஜூன் 2022

## ஆசிரியர்

எஸ். ஆர். தனபாலசிங்கம்

## படைப்பாளிகள்

| | |
|---|---|
| பீ.ரீ.அஸீஸ் | அஸ்வினி வையந்தி |
| தி.லலிதகோபன் | செ.ஞானராசா |
| அஸ்ரபாநூர்தீன் | மருதூர் ஜமால்தீன் |
| க.யோகானந்தன் | சம்பூர் சமரன் |
| ர.சசிகலா | தாமரைத்தீவான் |
| வசந்ததீபன் | க.மங்களேஸ்வரி |
| இஸ்மத்பாத்திமா | வையலான் |
| சோ.பத்மநாதன் | சி.வினோஜிதன் |
| நல்லை அமிழ்தன் | எஸ்.ஆர்.தனபாலசிங்கம் |

மூலமும் பெயர்ப்பும் : சி.சிவசேகரம்

கட்டுரை : அன்னலட்சுமி இராஜதுரை

அஞ்சலிக்குறிப்பு

பதிவு

வடிவமைப்பு - ரோ.சுதர்ஷினி (Google Digital)

தொடர்புகளுக்கு,
ஆசிரியர்,
நீங்களும் எழுதலாம்
43/4, சனல் லேன்,
திருகோணமலை.
e.mail : n.ezhuthalam18@gmail.com
0778812912



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2
0
0
7

# இன்றைய தேவை முறைமை மாற்றமே

மார்ச் - ஏப்ரல்

உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும் சேராது இயல்வது நாடு — என்பது திருக்குறள்.

வள்ளுவர் உறுபசியோடும் ஓவாப்பிணியோடும் செறுபகையை ஏன் சேர்த்துக்கொண்டார் என்பது தெட்டத் தெளிவு.

நாங்கள் சுதந்திரமடைந்து 74 ஆண்டுகள் ஆகிவிட்டது. இன்று நாங்கள் படுகுழியை நோக்கி நகர்ந்துள்ளோம் என்பதுதான் கண்கூடான நிலைவரம்.

செழிப்பை ஏற்படுத்த தேர்ந்தெடுத்த பாதை உண்மையானதா என்பதே கேள்வி.

இனம், மதம், மொழி ஆகிய வேறுபாடுகளுக்கு வழங்கப்பட்ட அங்கீகாரத்தை தவறான வழியில் தூண்டிச் செல்வதன் மூலம் அதிகாரத்தைப் பெறுதல் ஒரு வழிமுறையானது. இதன் விளைவாக கொடூரமான சமூக அரசியல் சூழலில் ஊழல் பரவியது. இதனால் சமூக அரசியல் முறைமை முழுமையும் சீரழிந்தது. பிளவுகளால் பகைமையுற்ற சமூகங்களானோம்.

இறுதியாக நாம் நெறிமுறையற்ற நெறியொன்றைப் பெற்றோம். "இலங்கை தற்போது பெரும் செங்குத்தான சரிவில் இருக்கிறது. ஆபத்தானதும் ஆழமானதுமான படுகுழியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுந்துவிடுவதற்கான விளிம்பில் இருக்கிறது." என்பது ஆய்வாளர்களின் கூற்று.

அந்தப் படுகுழியானது அரசியல் பொருளாதார நெருக்கடியினால் உற்பவித்தது. கடன் சுமை - கையேந்தும் நிலை, வேலையின்மை - வருமான இழப்பு, உணவுத்தட்டுப்பாடு, பெரும் பஞ்சம் - பட்டினிச்சாவு, மருந்துத்தட்டுப்பாடு - பெரும்நோய், போஷாக்கின்மை - மந்த புந்தி, மனஉளைச்சல் - உளவியற் பிரச்சினைகள், வன்முறை – குடும்ப வன்முறை, மனிதாபிமானப் பேரவலம் என இன்னோரன்ன பல.

"இந்த அரசாங்கம் குண்டர்கள் போன்ற பிக்குகளை வளர்த்தெடுத்து, அவர்களுக்கு பதவி உயர்வு அளித்து பல்வேறு இடங்களிலும் அமர்த்தியிருக்கிறது.... தீவிரவாதத்தைப் பற்றிப் பேசுவதற்கு தங்கள் பிரசாரங்களில் சிறிது நேரத்தை ஒதுக்கியதாக பல பிக்குகள் ஒப்புக்கொண்டனர்"

-கல்கந்த தம்மானந்த தேரர் - Daily Mirror 09.06.2022 வியாழன் தினக்குரல்

தேரரின் மேற்படி செவ்வியை பார்க்குமிடத்து நாம் எத்திசையில் பயணித்திருக்கின்றோம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. எனவே தான் நெறிமுறையற்றதன் ஊடாக எதனையும் சரிப்படுத்த முடியாது. தேவையானது ஆட்களை மாற்றுவது அல்ல. முறைமையை மாற்றுவதே (System Change) கோதா கோ கம (Go home Gota) காலிமுகத்திடல் போராட்டக்காரர்களின் கோரிக்கை இதுவாகவே தென்படுகிறது. இந்த மாற்றம் வரவேற்கத் தக்கதும் முற்போக்கானதுமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையராக எம்மை பொதுவாகப் பீடித்திருப்பது மறதி என்னும் பெரும் நோய். எங்கள் வயிற்றை நிரப்ப ஏதாவது கிடைத்தால், அதனால் அவர்களை ஆதரித்து மீண்டும் பழைய சீரழிவு வட்டத்திற்குள் செல்ல நினைத்தால், அரசியல்வாதிகளையும் அதிகாரிகளையும் குற்றம் சொல்லிப் பிரயோசனமில்லை. அது இந்த நாட்டுப் பிரஜைகள் நம் அனைவரினதும் குற்றமாகும்.

நாம் நிரந்தர அரசியல் நீக்கம் செய்யப் பட்டவர்களாக ஒதுங்கி இருக்கவியலாது. நாம் எந்தப் பக்கத்தில் நிற்கப் போகின்றோம் என்பதே நம் முன் உள்ள தேர்வு.

தம்மைச் சூழ நடப்பவை பற்றி எதிர்வினை யாற்றுபவனே உண்மையான கவிஞன். "ஆகா என்றெழுந்தது பார் யுகப்புரட்சி கொடுங்காலன் அலறி வீழ்ந்தான்" என ரஸ்யப்புரட்சியை (அக்டோபர் 1917) வரவேற்றவன் பாரதி என்ற வகையில், "தடைகளைத் தகர்த்து தகவுகளைத் தேடி"

நீங்களும் எழுதலாம்
அன்புடன் ஆசிரியர்
15.06.2022

| | |
|---|---|
| கவிதைக்கான | நீங்களும் எழுதலாம் |
| பயில்களம் | |
| பரிசோதனைக் களம் | |
| காத்திரத்தின் களம் | |
| கருத்தாடற் களம் | |
| விளக்கக் களம் | |
| விமர்சனக் களம் | |

படைப்புக்களில் வரும் கருத்துக்களுக்கு படைப்பாளிகளே பொறுப்பாளிகள். படைப்பை செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமை உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வான் கோழிகள்

வான் கோழிகள்
மயிலாக வேடமிடுகிறது
ஆட்டத்தை ரசிக்க
ஆள்தேடி அலைகிறது
உயரப் பறக்கும்
பருந்துடன் ஊர்க்குருவி
இணைத்துப் பார்க்கிறது தன்னை
ஊருக்குள் தன் மதிப்பை
உயர்த்திக் கொள்ள நினைக்கிறது
வெளி வேசங்கள்
வேரூன்றி முளைவிடுகிறது
வெளிப்படைத் தன்மைகள்
வெட்கத்தால்
மண்ணுக்குள் முகம் புதைக்கிறது
கபடத்தனங்கள்
கை கொட்டிச் சிரிக்கிறது
நேர்மையும் நெறிமுறையும்
நெருக்கடி அறைகளுக்குள்
மூடி வைக்கப்படுகிறது
பொய் சொல்லிப்
பிழைப்பதொரு புது நெறியாக
பிறப்பெடுத்து வருகிறது
உண்மைகள் ஊமையாகி
உருப்பட முடியாமல்
உயிரிழந்து போகிறது
திறமைகள் திரையிட்டு
மறைக்கப்படுகிறது
முறையில்லா வெற்றிகளை அவை
மிஞ்சிடக் கூடாதென்ற
ஆவேச நினைவுக்குள்
அமிழ்த்தப்படுகிறது.

பீ.ரீ.அஸீஸ்
கிண்ணியா - 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவைகள் வேண்டும்

ஒரு குவளை தேநீருடனும்
போர்வை தூக்கத்தோடும்
ஒரு நாள் மழைப்பொழுதையாவது
கடந்து விட வேண்டும்!

வெறுங்கால்களுடன்
உச்சி வெயில் உறவாடிய
ரோட்டை மிதித்து
ஒரு நாளேனும்
நடைபோட வேண்டும்!

ஆகாய பட்டம் விட்டு
நூற்கட்டு தீர்ந்துபோகு
மட்டும் காற்றிலே
கதை பேச வேண்டும்
ஒரு நாளேனும்!

தீவறையிலே
சுட்ட ரொட்டித்துண்டுகளை
சுடச் சுடவே உண்ண வேண்டும்
ஒரு குளிர்நாளேனும்!

எல்லா பருவகாலத்தையும்
எனக்கேற்றாற் போல்
மாற்றி ரசித்திட வேண்டும்
ஒருநாளேனும்!

- அஷ்வினி வைய்ந்தி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீர்த்தம்

நான் நலமுடன் எழுகின்ற
ஒவ்வொரு காலைகளிலும்
முந்தைய இரவினை
ஒரு மாத்திரை போல காண்கிறேன்
ஒரு வியாதிக்குள்
வீழ்தலைப்போல உறக்கமும்
அதன் பின்னான விழிப்பும்
நித்தியமான இளைப்பாறுதலுக்கு
முன்பான இந்த மாத்திரைகளும்
ஒரு மிடறு நீரும்
காலத்தின் சுழற்சி என்கிறாய்
இதனை
குறி தவறாது வீழுமோர் நாளில்
அன்பே நீயொரு கிணறாக இரு
புலனடங்கி போன பின்பும்
என் தேகம் அருந்தட்டும்
உன்னை தீர்த்தமென.

## நான் குருடனாகிய கதை

வெறுமையில் இருந்த
பொழுதுகள் கருமையாக
ஆடையென நழுவுகின்றன
வர்ணங்கள்
தூரிகைகள் தொடாத தூரங்களில்
ஒளிந்திருக்கின்றன சித்திரங்கள்
கள்ளன் போலீஸ் விளையாட்டில்
ஒரு சித்திரத்தை தொட்டுவிடுகிறேன்
ஆடையற்ற உடல் போல
என் கண்களில் மிதக்கிறது ஓவியம்
என் விழிகளின் வெண்மையை
கொடுத்து விடுகிறேன்
தேவதையாக மாறி விடுகிறது ஓவியம்
இதுதான் நான் குருடனாகிய கதை.

**தி.லலித்கோபன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தளம்பல்

யார் அதிபர் - யார் அமைச்சர்
யாருக்கும் தெரியாமல்
யார் யாரோ
வருவதும் போவதுமாக

போ! என்னும் பலருடனும்
போகாதே என்னும்
சிலருடனும்
ஆர் பாட்டோ
ஆர் கூட்டோ
ஆர் வீட்டோ
ஆர்ப்பாட்டம்

தொடருந்து போல
தொடரும் பெட்டிகள்
பானையில் இல்லை;
அகப்பையில் வரவில்லை

வரவுக்கேற்ப
செலவில்லாது
வாழ்க்கை? ஆனது.

நாடே கடனில்
நாட்டுக்கு நாடும்
கடத்தப்படும் நிலை

இருந்தவர் பறந்திட
இருப்பவர் மறந்திட
நடப்பது நடக்கிறது
நாளையும்? ஆக

செ.ஞானராசா
திருகோணமலை.

கிடைக்கப்பெற்றோம்

பேராசிரியர் செ.யோகராசாவின்
ஈழத்து நவீன
இலக்கியங்கள்-படைப்பாளர்கள்-தடங்கள்



விலை : 700/=

பதிப்பாசிரியர் த.மேகராசா
0772283313
வெளியீடு : சுதந்திர ஆய்வு வட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தம்

யுத்தம் இரும்புக் கரங்களால்
வடிவமைக்கப்பட்டு
குழாய் பொருத்திய வாய்களால்
நெருப்பை அள்ளி எறிகிறது.
அழிவின் காட்சியில்
இன்னும் நடைபழகா குழந்தைகள்
நீக்க முடியா வடுக்களைச் சுமந்து
ஊனமாகினர்.

யுத்தம் ஏனென்றறியா
பாலகரைப் போல
வான்பறந்து மகிழ்வுடன் கீச்சொலி
எழுப்பிய குற்றமிழைக்காத
வண்ணப் பட்சிகளையும்
தொலைவிலிருந்து ஏவப்பட்ட
தீ நாக்குகள்
எரித்து வீழ்த்தின

உயிரிழந்தது போக ஒளிந்திருந்து
மீண்டு வந்த செல்லப்பிராணிகள்
அலைக்கழிந்து தெருவெலாம்
உறவுகளையும் உணவையும்
தேடியபடி களைத்துப்படுத்தன.

ஆறாத்துயர் கொண்டு பூமி
அநாதரவாய்க் கிடக்கிறது
தான் சுமந்த மக்களைத் தொலைத்து
புல் பூண்டும் தலை கவிழ்ந்து
துயரைத் தெரிவிக்கும் போர்க்களம் இது.

ஆக்கிரமிப்பாளர்களே!
சுமக்க முடியா மகிழ்ச்சி கொண்டு
இனி நீவீர் நுழையலாம்
தேசிய கீதத்தை பாடியவாறு
வெற்றியின் கொடியை பறக்க விடுக
மிகுதியாய் இருந்தோரை
சிறைக்கைதியெனும் பெயர் சூட்டி
சித்திரவதை செய்திடுக.

சடலங்களின் மீதும்
குற்றுயிர்கள் மீதும் பாதம் பதித்து
வெற்றியைக் கொண்டாடலாம்
மதுவும் மங்கையரும் சூழ்ந்திருக்கிற
உங்கள் மகத்தான வெற்றி இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனாலும்,
வெற்றியடைந்த பலமானவர்களே!
உலகம் போற்றும் புகழையும்
கௌரவங்களையும்
கைப்பற்றிய நிலத்தையும்
தலைமீது சுமந்த படி
நீங்கள் ஒருநாளிலும்
உங்களுக்கான புதைகுழியை
தரிசிக்க முடியாது.

பாலையூற்று அஷ்ரபாநூர்தீன்

## அடியோடு போக்கு

இனவாதச் சூடேற்றும் உள்ளம்
இருப்போரால் நாடே சுடுகாடு
ஜனநாயகம் என்ற போர்வை
சதிகளால் கேடு
சமத்துவ எண்ணமதை நாடு

கொள்கையில் பற்றில்லை நடிப்பு
கொண்டோரைக் கண்டதால் வெறுப்பு
கள்ளம் பொய்யுள்ளம்
கருத்தில்லா நீதி கழுத்தறுப்பு
கடமையை செய்வதே நம் பொறுப்பு

பிரச்சினையே வாழ்வென்று ஆச்சு
பிளவுகளால் கொள்கையதும் போச்சு
இரங்கிடுவாரில்லை
இழி கூற்றால் பெரும் தொல்லை
இன்னல்கள் சூழும் இழிநிலை நீக்கு

சோதனை சூழ்ந்த இக்காலம்
சொகுசாக வாழ்ந்தவரால் வந்த ஓலம்
வேதனைகள் விளைத்திங்கே
விதி இதுவென்றார்
பாதகம் செய்வாரை அடியோடு போக்கு

-மருதூர் ஜமால்தீன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுமை

வறுமைப் போர்வையில்
மானுட உடல் வெக்கை
பசியின் போது
குழந்தைகளின்
கண்ணீரில்...
பனிக்கும் திவலைகள்

வயிறு ஒட்டி உலர்ந்து
மெலிந்து விட்டது
வறுமையின் வலி
கொடுமையானது...

வருமானம் வர முன்பே
வறுமை ஒட்டி உறவாடி
வீட்டில் குடியேறிவிடும்

வறுமை தரும் உழைப்பு
வீணாகிப் போவதில்லை...

அரிசி வரும்
அனைத்தும்
விரைந்து வரும்
கண்ணில் படு முன்பே
மாயமான்... உருவெடுக்கும்

வறுமை வந்திட
நோய்கள் வந்துவிடும்
காலம் கண்ணீரில்
கரைந்து போகும்...

ஏழ்மை நிறைந்த
நாட்டில்
அமைதி தொலைந்து
மகிழ்ச்சி மறையும்

குழந்தைகளின் மிடுக்கு
சொல்லாமல் போகும்
வறுமைத்தீ....
சன்னங்களாய்
துளைத்தெடுக்கும்

-க.யோகானந்தன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பம்

மாந்தர் குலத்தின் மகத்துவ பிணைப்பே
மாட்சிமை பொருந்திய குடும்ப வாழ்வியல்
மனிதர் மிருகமாய் அலைந்தனர் அன்று
மாற்றத்தின் பின்னே இணைந்தனர் இன்று

அன்னையும் தந்தையும் அடிக்கல் நட்டு
அழகாய் கட்டிய இல்லமே குடும்பம்
அமைதியும் அன்பும் அகலின் விளக்கென
அனுதினம் வாழும் ஆண்டவன் சந்நிதி

புதுயுக வாழ்வில் எத்தனை புதினங்கள்
புதுமையாய் தோன்றுதே கூட்டுப் பிணைப்புகள்
புரிதல் குறைவு பொறுப்புகள் துறப்பு
புன்னகை பூக்கும் நேரங்கள் மறுப்பு

கடமையின் பின்னே காலத்தை கடத்தி
கண்ணை மூடி இருளில் பயணம்
கவலையை சுமந்து தோள்களில் தாங்கிடும்
கணத்தை மறந்து ஒழியும் அன்பு

தனித்து இயங்கி தன்னிலை மறந்து
தட்டிக் கழிக்கும் போக்குகள் முளைக்கும்
தற்கால உலகில் சவால்கள் ஆயிரம்
தடைகள் சூழ்ந்த நடத்தைக் கோலம்

உன்னை காக்கும் உயிரைப் போலவே
உரமாய் அமைந்திடு குடும்பம் தழைக்கும்
உணர்ந்தே நடந்தால் உறவுகள் நிலைக்கும்
உன்னத வாழ்வு உதயம் கொள்ளும்...

- சம்பூர் சமரன் -

⇨⇨⇨⇨⇨⇨⇨⇨⇨⇨⇨⇨⇨⇨⇨⇨⇨⇨⇨⇨⇨⇨⇨⇨⇨

வங்கி மூலம் வருட சந்தா செலுத்த விரும்புவோர்
பின்வரும் வங்கிக் கணக்கிற்கு 500/= செலுத்திப்
பற்றுச் சீட்டினை அனுப்பி வைக்கவும்.

**R.Thanabalasingam**
**A/C No.106653402077**
**Sampath Bank**
**Trincomalee.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருந்தவிப்பு

சகோதரத்துவம், சகிப்புத்தன்மை
சீர்பெற்ற வரிசை, சிரம்தாழ் மதிப்பும்
பள்ளிக்காலங்களில் பழகாத
பழக்கங்களை மிகத்துல்லியமாக
பழகிக்கொண்டிருக்கிறார்கள் எம்மவர்கள்.

பஞ்சு மெத்தைகளில்
உறங்கிய காலம் கடந்து
கொளுத்தும் வெயிலில்
கொள்ளிக்கட்டைகளாய்
கொள்வனவிற்காக காத்திருப்புக்கள்...!

அதிகரித்த விலையேற்றம் கண்டு
அரிசியில்லா பெட்டகங்கள்
அடிக்கும் காற்றில்
அங்குமிங்கும்
உருண்டோடிக்கொண்டிருக்கின்றன...!

மில்லியன் போட்ட
குட்டிகளெல்லாம்
ரில்லியனாய் கழுத்தில்
கயிறு முடிச்சுக்களாய் இறுக்க
பொறியில் சிக்குண்ட எலியாய்
பெருந்தவிப்பு...

காகிதங்கள் மட்டுமே
அச்சடிக்கப்படுகின்றன – பாவம்
சில்லறைகள் தமது
சிணுங்கல்களை
இடைநிறுத்திக் கொண்டன...!

என்பதுகள், தொண்ணூறுகளை
மிஞ்சிய அறிவு படைத்ததாய்
அலட்டிக் கொண்ட இரண்டாயிரத்தின்
குழந்தைகள் மீண்டும் கற்றுக்
கொள்கிறார்கள் வாழ்வியல் அம்சங்களின்
வலிகளை....!

கிழவிகளெல்லாம்
கிளியோபட்ராக்களாக ஜொலிக்க
அழகிகளெல்லாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறீம் இல்லா
கிழவிகளாக பரிதவிப்பு...!

நெடிய பாதைகள்
நீள்வதும், வளர்வதும்
வளைவதுமாய் செல்ல
பயணங்கள் மட்டும் துண்டிக்கப்பட
பச்சிளம் சிசுக்களின் உயிரும்
பறிமுதல் செய்யப்படுகின்றன...!

இப்போது
இனம், மதம், மொழியெல்லாம்
ஒன்றானது
நாடா? சுடுகாடா? மனம்
இரண்டானது.
இத்துடன் எல்லாம் முடிந்து போகும்
இல்லையேல்
இதுவும் கடந்து போகும்...!

**திருமதி.ர.சசிகலா,**
**வரோதயநகர், திருகோணமலை.**

## நன்றாக வாழ்வோம்

1) தமிழர் யாம் - தமிழ் எம் ஆவி
தமிழர் மண் அரிபட்டாலும்
தமிழினை விடாமற் காப்போம்,
தமிழ் இன்றேல் சுவை உண்டோ?

2) தமிழ் 'தமிழாக' வேண்டும்,
தமிழினைக் கலத்தல் வேண்டாம்?
'தமிழ் நூல்கள்' கற்றல் வேண்டும்,
தமிழ் மரபைப் பேண வேண்டும்!

3) 'பாவாணர்' நூல்கள் கற்போம்,
பைந்தமிழ்ச்சொல் குவிப்போம்!
'பாவேந்தர்' பாநூல் கற்போம்,
பலசொல்லும் தமிழாய்க் காண்போம்!

4) சொற்பஞ்சம் தமிழுக்கில்லை,
சொல் ஆட்சித்தூய்மை உண்டு!
நற்றமிழ் நலமாய் வாழ,
நாமும் நன்றாக வாழ்வோம்!

**'தாமரைத்தீவான்'**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்திமக் காலத்தின் ஏடு

காற்றடித்தது
கண்கள் மூடியது
காலம் காணாமல் போனது
அடிமைப்படுத்தப்படுவது
அன்போ...... அதிகாரமோ....
துன்புறுத்துவது
உறவோ... பகையோ...
சுதந்திரம் எக்காலத்தும் எந்நிலையினும்
மேன்மையானது
உன்னைத் தின்ன
என்னால் முடியவில்லை
என்னைத் தின்ன உன்னால் முடியவில்லை
காலம் நம்மைத் தின்ன
கொக்காய் காத்திருக்கிறது
அனாதையாய் பிறப்பது
எதிர்பாராத காயம்
ஆதரவற்று வாழ்வது சீழ்கட்டிய ரணம்
அவ்வப்போது கனவுகளே நித்ய சுகம்
தேடித்தேடி சேர்க்கிறார்கள்
மூடி மூடி சேமிக்கிறார்கள்
மூடர்கள் வாடி உதிர்ந்து மறைகிறார்கள்
நீண்ட நாட்களாக எதிர்பார்க்கிறேன்
இன்னும் வந்து சேரவில்லை
நானும் காத்திருப்பை விட்டு விடவில்லை
ஆற்றில் பூக்களை தூவுங்கள்
சாகடிக்கப்பட்டவர்கள்
ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்
சாகடித்தவர்களை தூக்கி வீசினால் ஒழிய,
தேசம் வேடிக்கை பார்க்கிறது
எத்தனை இதயங்களை உண்பீர்கள்?
எத்தனை உயிர்களை குடிப்பீர்கள்?
எத்தனை காலம் வாழப்போகிறீர்கள்?

- வசந்ததீபன் -

**அறிமுகக் குறிப்பில் உங்களது கவிதை தொகுப்பு இடம்பெற வேண்டுமாயின் ஒரு பிரதியை அனுப்புங்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமும் மனிதராக

இனமென்று மதமென்று
வேற்றுமைகள் கடந்திங்கு
சீர்பெற்று சிறந்திங்கு
வாழ்ந்திடுவோம்

தூற்றுவோர்
தூற்றட்டும் - அதை
தூசென எண்ணியே
துயரத்தைக் கடந்திடுவோம்

கூற்றவன் வருமுன்னே
கூடுவோர் கூடி
கூட்டுக் குடும்பமாகி
மகிழ்ந்திடுவோம்

உயிர்கொன்று உடல்தின்று
புவி மீதில்
இனம் கொன்று சினம் கொண்டு
வாழ்வோரை

நல் மனம் கொண்டு
அறம் கொண்டு
தினமொன்று கூறியே
மறுபிறப்பொன்று
கொடுத்திடுவோம்

கள்ளென்று களவென்று
காமத்தில் பெண்ணென்று
போதையில் கிடப்போரை

வாதித்துப் போதித்து
போதனையை போதையாக்கி
சாதித்துக் காட்டிடுவோம்

ஏழையாய் கோழையாய்
ஏமாளி வாழ்வுதனை
அடியோடு ஒழித்திடுவோம்

பாமர வாழ்வுதனை
பண்டிதமாக்கியே
பாருக்குக் கொடுத்திடுவோம்

நாமும் மனிதராய்
நற்பணி செய்திங்கு
நலம் பெற்று வாழ்ந்திடுவோம்

சூழும் குற்றம்தனை
சுடர்விட்டுக்
கொழுத்தியே — தீ
பயிராய் வளர்த்திடுவோம்.

க.மங்களேஸ்வரி
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீப்பிழம்பு பரிசாகும்.

நேர்மை வாய்மை உண்மை
இவற்றுக்கு ஆயுள் அதிகம்!
பொய்மை கயமை பொறாமை
இவற்றுக்கு ஆயுள் குறைவு!

உண்மையில் பூக்கும் பூக்கள்
வாழ்வில் தீராத சுகந்தம் - அவை
சுவையில் எவ்வளவு கசந்தாலும்
மனங்களில் என்றும் மணக்கும்!

நேர்மையின் வசந்த தினம்
வாழ்வு தோறும் வீசும்!
சொந்தங்கள் தரும் சுகந்தத்தை
அவர்களது ஜாலத்தில் புரியலாம்!

சொந்தங்கள் நேர்மையில் கழறலாம்
பந்தங்கள் வாய்மையில் தவறலாம்
உறவுகள் ஆயிரம் உருவாகலாம் - என்றும்
உண்மைக்கு ஆயுள் அதிகம்!

நல்லதையே பிறருக்கு நாடு
நல்லதுவே உன்னைத் தேடும்!
தீயதை நீ பிறருக்கு பரிசளிக்க
தீப்பிழம்பு உனக்குப் பரிசாகும்!

வார்த்தைகள் பல நீ – வீசி
சேறும் சகதியும் நீ – பூசி
நோவினைகள் பல செய்ய
அத்தனையும் உனையே சாரும்!

அரசன் அன்று ஆள்வான்
தெய்வம் நின்று கொல்லும்!
அறிவீனத்தில் ஆனந்தம் அநியாயம்!
உனை நீயே அழித்திடுவாய் கவனம்!!

எஸ்.ஏ.இஸ்மத் பாத்திமா
பஸ்யால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழி

மின்னலடித்து
இடி இடித்து
பெருமழை பொழிந்து
வெள்ளம் போட்டு
ஓய்ந்திருக்கிறது வானம்

மழைக்கு முளைத்த
காளான்களும்
ஆர்ப்பரித்த ஈசல்களும்
ஆரவாரமின்றி
அடங்கிக் கிடக்கின்றன

பற்றுவதற்கு
வழி தெரியாது
இங்குமங்கும்
தாவிக்கொண்டிருக்கின்றன
ஞான சூனியங்கள்

பணமும் பதவியும்
அதிகாரமும் ஆணவமும் கொண்ட
சுயநலங்கள்
சுயமிழந்து நிற்கின்றன

வாய்ப்புக்களை
நழுவவிட்டு நழுவவிட்டு
வழுவழுத்த கூட்டங்கள்

மழைக்கால இருட்டில்
வழிகாட்டியின்றி
அலையும் மந்தைகள்
மேய்ப்பனைத் தேடுகின்றன.

- வையலான் -

பட்டங்கள் சூடுவது தொடர்பாக கவிக்கோ அப்துல் ரகுமான் எழுதிய கவிதை ஒன்று.

பலர் பட்டங்களை
தமக்குத் தாமே
சூட்டிக்கொள்கிறார்கள்
இது அவர்கள்
தமக்குத் தாமே
கட்டிக்கொண்ட
தாலி

-நன்றி 'பசுமை'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழ்ந்த அஞ்சலி

## பாக்கியராஜா மோகனதாஸ்

மட்டக்களப்பு துறைநீலாவணையைச் சேர்ந்த ஆசிரியர் ஊடகவியலாளர், கட்டுரையாளர், நேர்முகவியலாளர், நாடக ஆற்றுகைக் கலைஞர் எனப் பன்முக ஆளுமை கொண்ட பா.மோகனதாஸ் 23.04.2022இல் (34 வயது) காலமானார்.

தணியாத ஆர்வம் காரணமாக 2012ல் ஊடகத்துறையில் நுழைந்த மோகனதாஸ் குறுகிய காலத்தில் கலை இலக்கியம் அரசியல் சமூகம் சார்ந்து எண்ணூறுக்கும் (800) மேற்பட்ட படைப்புக்களை ஆக்கிப் பிரசுரித்துள்ளார். அவற்றில் அவற்றில் முந்நூறுக்கும் (300) மேற்பட்டவை நேர் காணல்கள்.

2019ம் ஆண்டு கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் இளம் கலைஞர் விருதினைப் பெற்றவர்.

தான் நேர்கண்ட நேர்காணல்களில் இலக்கியம் சார்ந்த ஆளுமைகளைத் தெரிவு செய்து தமிழில் இதுவரை அதிகூடிய ஆளுமைகள் (73) கொண்ட படைப்பாக்க ஆளுமைகள்' என்னும் பெருந்தொகுப்பை அண்மையில் வெளியிட்டவர்.

ஊடகத்துறைக்கு ஓர் ஈடு செய்யமுடியாத இழப்பு. பெருந் தொகுப்பினால் என்றும் பேசப்படப்போகும் அன்னாருக்கு நீங்களும் எழுதலாமின் ஆழ்ந்த அஞ்சலிகள்.

## நூல் வெளியீட்டு விழா

### 05.03.2022





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாக்கியராசா மோகனதாஸின் 'படைப்பாக்க ஆளுமைகள்' 'நூல் வெளியீடு நீங்களும் எழுதலாம் வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் திருகோணமலை சர்வோதயம் மண்டபத்தில் எஸ்.ஆர்.தனபாலசிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

முதன்மை அதிதியாக தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி.ஜெ.ஸ்ரீபதி, சிறப்பு அதிதியாக பட்டணமும் சூழலும் பிரதேச உபதவிசாளர் முகமட் நௌபர், கௌரவ அதிதியாக சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் வீ.கோணேஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். வரவேற்புரையினை சிரேஷ்ட ஊடகவியலாளர் அ.அச்சுதன் வழங்க, நூல் நயவுரையினை கவிஞர் க.யோகானந்தன், கவிதாயினி சௌ.சந்திரகலா ஆகியோர் ஆற்றினர். முதற்பிரதியினை பிரம்மஸ்ரீ சோ.இரவிச்சந்திரக்குருக்கள் பெற்றுக்கொண்டார். நூலாசிரியர் ஏற்புரை வழங்க நன்றியுரையினை இளம் ஊடகவியலாளர் ஆர்.சமீரா ஆற்றினார்.











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களும் எழுதலாம் ஒரு கண்ணோட்டம் -

அன்னலட்சுமி இராஜதுரை

**திரு. எஸ்.ஆர். தனபாலசிங்கத்தை ஆசிரியராக் கொண்டு திருகோணமலையிலிருந்து கடந்த 2007ம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து வெளிவரும் இருமாத கவிதை இதழான 'நீங்களும் எழுதலாம்', ஒரு சில வருடங்கள் வெளிவர தவறினாலும் மேலும் தொடர்ந்து நீடித்து ஈழத்தில் சுமார் 30 இதழ்களை வெளிக்கொணர்ந்த ஒரே ஒரு கவிதை ஏடு என்ற பெயரையும் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.**

ஆரம்பத்திலிருந்து இற்றைவரை இவ்விதழில் பழையவர்களும் புதியவர்களுமாக சுமார் 300 கவிஞர்கள் தமது கவிதைகளைப் படைத்து வருவதை அவதானிக்க முடியும்.

ஒரு புதுக் கவிதை இதழ் பற்றி சிந்திக்கின்ற போது தமிழ்க் கவிதை மரபுத் தொடர்ச்சி குறித்து சிறிதேனும் சிந்திக்காமல் இருக்க முடியாது. சங்க காலத்திலிருந்தே ஓசைக்கு முக்கியத்துவம் தந்து கோலோச்சி வரும் தமிழ்க்கவிதைத்துறை யாப்பிலக்கணத்தோடு அமைந்தது என்பது - அதாவது எழுத்து, அசை, சீர், தளை , அடி, தொடை என்ற இலக்கண உறுப்புகளால் கட்டப்படுவது என்பதும் செய்யுள் எனப் பொருள் கொள்ளப்படுவதுமான யாப்பு வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என நான்கு வகைப்படும் என்பதும் அது முறையே செப்பலோசை, அகவலோசை துள்ளலோசை, தூங்கலோசை உடையது எனவும் விபரிக்கப்படுவது தெரிந்ததே. மரபுக்கவிதை சார்ந்து சங்க இலக்கிய பாடல்கள், பக்தி இலக்கியப் பாடல்கள் மற்றும் காப்பியங்கள் யாவும் ஆக்கப்பட்டு சிறப்புற்று விளங்குகின்றன.

கண்ணில் படும் காட்சிகளை தனக்குள்ள அனுபவங்களோடு பொருத்திப்பார்க்கும் இயல்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞருக்குரியது. கல்வி கேள்வியினால் சொல்லாட்சியும் கொண்ட கவிஞனிடம் காட்சியும் அனுபவமும் இணைந்து கவிதை பிறிட்டெழுகிறது. கவிதை என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட சொற்களால் அழகுறக் கட்டப்படும் வடிவம் என்பர். ('best word in best form').

உள்ளத் திலுள்ளது கவிதை - இன்பம்
உரு வெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில் - உண்மை
தெரிந்துரைப்பது கவிதை"

என்றார் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை

எனினும் காலவோட்டம், கவிதை வடிவிலும் போக்கிலும் உள்ளடக்கத்திலும் மாற்றங்களை ஏற்படுத்தியதைப் பார்க்க முடியும். இதற்கு மேலைநாட்டு இலக்கியத் தாக்கம் முக்கியமானது எனக் குறிப்பிடப்படுகிறது.

அரசியல், அறிவியல், தொழிலியல், சமூகவியல் துறைகளில் மேற்கே எழுந்த மாற்றத்தால், 18ம் நூற்றாண்டில் உரை வழியே இலக்கியம் அறிமுகமாகியது.

இது இந்தியாவில் 19ம் நூற்றாண்டில் ஏற்படுகிறது. தமிழகத்தில் 1876ல் புதின இலக்கியம் தோன்றிய பின்னரே பாரதியாரால் கவிதை இலக்கியம் தோன்றியது. இதனால் என்ன மாற்றம் நிகழ்ந்தது? செய்யுள் உரை நடைக்கு மாறியது. உதாரணம் சிறுகதை நாவல், கவிதைதான் இலக்கியம் என்ற நிலை மாறி கதையும் இலக்கியமானது.

செய்யுள் வழியேதான் கவிதை என்ற நிலை மாறி உரைவழியேயும் கவிதை வளர்ந்தது என்ற கருத்தினையும் ஈண்டு நினைவில் கொள்ளலாம். இவற்றின் வளர்ச்சிக்கு அச்சுக்கலை வளர்ச்சி பெரிதும் சாதகமாக அமைந்தது குறிப்பிடத்தக்கது. இத்தகையதோர் சமூகப்பின்னணியில் 'நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற்குழைத்தல், இமைப்பொழுதும் சோராதிருத்தல்' என்ற இலட்சியத்துடன், மரபுக் கவிதையைப் புனைந்துகொண்டிருந்த கவிஞர் பாரதி மனதில் எழும் கவிதா வீச்சினை எழுத்தில் புதிய, வசன கவிதையை, அதாவது கவிதைக் கட்டமைப்பினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகர்த்து கிரமமாகக் சுதந்திரமாகக் கவிதைகளை எழுத ஆரம்பித்தார். பாரதியார் எழுதிய வசன கவிதைகளே தமிழில் காணும் புதுக்கவிதை முறைக்கு முன்னோடியாக அமைந்தது என்பர். பாரதியைத் தொடர்ந்து 20ம் நூற்றாண்டில் கவிதை நவீன கவிதை, வசனகவிதை, புதுக் கவிதை என மாற்றங்களைக் கண்டது. தமிழ் நாட்டிலும் தொடர்ந்து ஈழத்திலும் அவ்வப்போது தோன்றிய சிற்றிதழ்களும் கவிதை இதழ்களும் புதுக்கவிதை வளர்ச்சிக்கு களம் அமைத்துக் கொடுத்துள்ளன.

மக்களின் வாழ்வியலையும் ஏற்றத் தாழ்வினையும் ஏக்கங்களையும் சமத்துவப் போராட்டங்களையும் சித்திரிக்கும் புதுக்கவிதைகள் புற்றீசலைப்போல் பெருகலாயின. பலர் புதுக்கவிதை அல்லது வசன கவிதை என்ற பெயரில் வெறும் சொற்சிலம்பம் ஆடுகின்றனர் என்ற கருத்தும் உள்ளது.

ஈழத்தைப் பொறுத்தவரை அமரர் வரதரின் 'தேன்மொழி', கவிதைக் கென்றே வெளியிடப்பட்ட முதல் சிற்றிலக்கிய ஏடாகும். இதனையடுத்து கவிதைக்கென சிற்றிதழ்கள் காலத்துக்குக் காலம் களம் அமைத்துக் கொடுத்துள்ளன.
தற்போது இவ்வகையில் ஒரு சில கவிதை ஏடுகள் வெளியாகிக் கொண்டிருப்பதும் கருத்தில்கொள்ளத்தக்கது.

இத்தகையதொரு பின்னணியில் தான் எஸ்.ஆர் தனபாலசிங்கம் அளிக்கும் 'நீங்களும் எழுதலாம்' கவிதை இதழின் தோற்றத்தையும் வளர்ச்சிப் போக்கையும் பார்ப்பது பொருத்தமாகும்.

வடமராட்சியில் தமது பாடசாலைக் காலத்தில் இருந்தே இலக்கியத்தில் ஆர்வம் கொண்டவராக எழுத்து, பேச்சு போன்ற போட்டிகளில் பங்குகொண்டும், இலக்கியரீதியான செயற்பாடுகளில் ஈடுபட்டும் ஆழ்ந்த வாசிப்பில் ஈடுபட்டும் தம்மை இலக்கிய நேசனாக குறிப்பாக கவிதை நேசனாக நிலை நிறுத்திக்கொண்டவர் தனபாலசிங்கம். பாடசாலையின் வருடாந்த மலரான 'வசந்தம்' இதழின் இணை ஆசிரியராகவும் கடமை புரிய வாய்ப்புப் பெற்ற இவர், பின்னர் தொடர்ந்து ஈழத்துப் பத்திரிகைகள், சஞ்சிகைகளில் கவிதைகளை எழுதினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நடைமுறை வாழ்வில் ஏற்றத் தாழ்வுகள், வேற்றுமைகள், மூடநம்பிக்கைகள் நிறைந்த சமூகத்தை நான் எதிர் கொண்ட போது அவற்றை இல்லாதொழிக்க என்னால் ஆனதைச் செய்யவேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. இத்தகைய சமூக அநீதிகளுக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும் என்ற சிந்தனை, அதனை எழுத்தினூடாக செய்ய முடியும் என்ற நம்பிக்கை ஆகிய இவையெல்லாம் இலக்கியத் துறையில் ஆர்வம் ஏற்படக் காரணமாக அமைந்தன.

மேலும் இலக்கியமானது சமூகமாற்றத்தை ஏற்படுத்தும் கருவிகளில் மிக முக்கிய இடத்தினை வகிக்க வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும்' என இவர் தமது நிலைப்பாட்டினை தினக்குரல் செவ்வி ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

அப்போது நிலைத்திருந்த போர் சூழல் பின்னணியில் 'நீங்களும் எழுதலாம்' என்னும் பெயரைக் கொண்ட இருமாத கவிதை இதழ் 2007ம் ஆண்டு பங்குனி - சித்திரை இதழாக இவரால் வெளியிட ஆரம்பிக்கப்பட்டது.

ஆசிரியப்பணியில் மாற்றலாகி திருக்கோணமலைக்கு வந்திருந்த 2003 காலப்பகுதியில் பரபரப்பான அவசரச் சூழல் நிலவியது. எப்போதாவது சில நூல் வெளியீடுகளும் சில அரச சார்பற்ற நிறுவனங்களின் ஏற்பாட்டில் இலக்கிய சந்திப்புகளும் கலந்துரையாடல்களும் இடையிடையே நடைபெற்றுக் கொண்டிருந்தன அவற்றில் நந்தினி சேவியர், சத்தியதேவன், தில்லை முகிலன் போன்ற சில நண்பர்கள் தொடர்ந்து கலந்து பல்வேறு விடயங்களையும் உரையாடுவோம்.

வன்முறைச் சூழல் காரணமாக போக்குவரத்து தொடர்பாடல் என்பன சீரற்று இருந்தன இந்நிலையில் பிரசுர வசதிகளும் களங்களும் தடைப்பட்டிருந்தன. அந்நேரங்களில் பிரசுர இடர்ப்பாடு குறித்து எழுத்தாளர்களின் மனக்குறையை அறிந்து கொண்டேன்.

இலக்கியத்தின் காத்திரத்தன்மையை பேணுவதில் சிற்றிதழ்களின் பங்கு மிக முக்கியமானது என்ற சிந்தனை தோன்றிய வேளையில் தான் ஒரு சிற்றிதழை வெளியிட வேண்டும் என்ற எண்ணமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதில் உதித்தது. ஒரு முழுமையான சிற்றிதழை வெளிக்கொணர்வது பொருளாதார ரீதியில் சிரமமான காரியம் என்பதால், கவிதைக்கென ஒரு சிற்றிதழை வெளியிடுவதென நண்பர்களின் ஆலோசனையின் படி முடிவெடுத்தேன்.

எல்லோரையும் எழுதத் தூண்ட வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் வித்தியாசமாக இருக்கட்டும் என்பதற்காகவும் 'நீங்களும் எழுதலாம்' எனும் பெயரிடப்பட்டது. அப்போது நிலவிய நிச்சய மற்ற தன்மை, எண்ணற்ற தடைகள் காரணமாக 'தடைகளைத் தகர்த்து தகவுகளை தேடி' எனபதனை மகுடவாசகமாகக் கொண்டோம்' என அவர் கவிதை இதழை ஆரம்பித்த சூழலை கூறியிருக்கிறார்.

அந்த முதலாவது இதழில், ஆசிரியர் இளைய தலைமுறைப் படைப்பாளிகளை (மாணவர் உட்பட) அறிமுகப்படுத்துவதுடன் களங்களை விரிப்பதும், தலைமுறை இடைவெளிகளை நிரப்புவதும், கவிதை சம்பந்தமாக பரிசோதனை என்பவற்றுக்கு இடம்கொடுப்பதும், கவிதைகளினூடாக சமூகப்பொறுப்புணர்வு பற்றி கருத்துக்களை முன்வைப்பதும் ஆகிய நோக்கங்களை கொண்டும் 'நீங்களும் எழுதலாம்' என்ற இருமாத இதழ் தனது பணிகளைத் தொடங்கியிருக்கிறது எனத் தரப்பட்டிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த இதழிலேயே 25 படைப்பாளிகளைப் பார்க்க முடிகிறது. பல்வேறு பிரச்சினைகள் குறிப்பாக போர் மேகங்கள் குவிந்திருப்பதனால் எழுந்த ஏக்கங்கள், பாதிப்புகளுடன் உணர்வுக் கோலங்கள் கவிதைகளாக மேலெழுந்தமை இயல்பானதே. அது தொடர்ந்தும் அம்புகளாக குத்திவருவதும் தொடர்கதை தான் முதலாவது இதழில் எஸ். கமலகாந்தன் படைத்த வாழ்க்கை என்னும் கவிதையை உதாரணத்துக்குக் காட்டலாம்.

கவிதை இப்படி விரிகிறது

'நாங்கள் எங்கள் உயிர்களைத் தக்க வைத்து
இரண்டு தசாப்தங்கள் முற்றுப் பெற்று விட்டன
ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு கணமும்
நாங்கள் புதிது புதிதாய் உயிர்த்தோம்
மரணப் படுக்கை வரை சென்று
இது எங்களுடைய எத்தனையாவது
அவதாரம் என்பது தெரியாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கடந்த காலத்தைப் போலவே**
**தேவையற்ற விவாதங்களுடனும்**
**முரண்பாடுகளுடனும்**
**காயங்களுடனும் மரணங்களுடனும்**
**வாழ்ந்து வருகிறோம்**
**இன்னும்**

அதே இதழில் அன்றைய அனாதரவான நிலையை துன்பம் என்னும் தலைப்பில் வே. சசிகலா என்பவர் தந்திருக்கும் கவிதையும் மனதைக் கீறியது.

**இயற்கை வளம் கொண்ட நாடோ**
**இரத்த வெள்ளத்தில்**
**இரவு நேரமதிலும்**
**இளைப்பாறவில்லை**
**இன்றோ நாளையோ என் உயிர் ஊசலாடும்**
**நித்தமும் காணும் காட்சி**
**நெஞ்சை உருக வைக்கும்**
**துன்பத்துக்கும் அதிர்வுக்கும் இடையில்**
**தொடரும் நம் வாழ்வு.**

என்று விபரிக்கிறார்.

இவ்விதமே எஸ். சத்தியதேவன், பா. கபிலன், நந்தினி சேவியர். கோவை அன்ஸார், க. யோகானந்தன் (திருகோணமலை), தாமரைத்தீவான், கோ, தர்ஸினி உட்பட பலரும் வாழ்க்கை நிலைகளைக் காட்டும் நல்ல கவிதைகளைத் தந்திருப்பதைப் பார்க்க முடிகிறது.

அத்துடன் மூத்த கவிஞர்களான மகாகவி, நீலாவணன் ஆகியோரின் பாடல்வரிகளை க. கைலாசபதி 'பாரதியும் மேனாட்டு கவிஞரும்' என்னும் தலைப்பில் எழுதிய ஒரு கட்டுரையின் முக்கிய குறிப்பு, மூலமும் பெயர்ப்பும் என்ற தலைப்பில் சேக்ஷ்பியரின் யூலியஸ் சீசர் கவிதைகளில் இருந்து சுவாமி விபுலானந்தரின் மொழிபெயர்ப்பில் ஒரு கவிதை என்றவாறு தரப்பட்டிருப்பது கவிதை நேசர்களின் அறிவுக்கு விருந்தாகும். இந்த வழிமுறை இற்றைவரை பின்வந்த இதழ்களில் எல்லாம் மூத்த கவிஞர்களது பல்வேறுபட்ட படைப்புகளோடு தொடர்புபட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

இந்த வகையில் இற்றைவரை புதியவர்களும் (மாணவர்களும்) பழையவர்களுமாக சுமார் 300 கவிஞர்கள் பங்குகொண்டு பல் வேறு நிலைமைகளை புதுக் கவிதைகளாக படைத்து வரும் இவ்விதழில், செயற்பாடுகளை மேலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஸ்தரித்து ஓர் இயங்குநிலையை தம்மால் இயன்றவரை உருவாக்கும் ஓர் உயர்ந்த நோக்கில் ஆசிரியர் 'நீங்களும் எழுதலாம்' வாசகர் வட்டத்தின் மூலம் திருக்கோணமலை பிராந்தியத்தில் இலக்கிய உரைகள், நினைவேந்தல்கள், கவியரங்குகள், உரை அரங்குகள், நூல் அரங்கு, பாராட்டு நிகழ்வு ஆகியவற்றையும் ஒழுங்கு செய்து நடத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன் சிற்றிதழ்களும் மற்றும் நூல் பிரசுரங்களும் இரத்தின சுருக்கமாக அறிமுகம் செய்து வைக்கப்படுகின்றன. 'நீங்களும் எழுதலாம்' இதழ் குறித்து வாசகர்கள் கவிஞர்கள் இலக்கிய வாதிகளின் கருத்துக்களும் பிரசுரிக்கப்படுவதனால் கவிஞர்கள் மற்றும் வாசகர்களின் வாசிப்பு எல்லைகளும் விரிவடைய தூண்டுவதாக உள்ளன. மொழிபெயர்ப்பு கவிதைகளும் ஆங்கில மூலத்துடன் தரப்படுவதையும் குறிப்பிட வேண்டும். இந்த வகையில் சோ. பத்மநாதன் சி. சிவசேகரம், ஏ. இக்பால், பிரமிள்,எஸ்.வி. இராஜதுரை. சக்தி அ. பாலையா (சி.வி. வேலுப்பிள்ளையின் தேயிலைத்தோட்டத்திலே' என்ற கவிதைத் தொடரின் தழுவல்) கே. எஸ். சிவகுமாரன் ஆகியோர் மொழிபெயர்ப்பு கவிதைகளைத் தந்தவர்களில் சிலராவர்.

இதழுக்கிதழ் கவிஞர்களுக்கும் வாசகர்களுக்குமாய் நறுக்குத் தெறித்தாற் போல் தமது கருத்துக்களை சிலவரிகளில் பகிர்ந்து கொண்டு ஆசிரியர் குறிப்பையும் மற்றும் மூத்த இளைய கவிஞர்களின் கவிதைப் பங்களிப்பினையும் பயில்களத்தில் மாணவர்கள் தரும் கவிதைகளையும் ஒரு கண்ணோட்டத்தில் பார்க்க ஓர் உதாரணமாக 2009 கார்த்திகை, மார்கழி இதழை நாம் நோக்கலாம். இவ்விடத்தில் புதுக் கவிஞரான ஆசிரியர் தாமும் சிந்தனையைத் தூண்டும் கவிதைகளை படைத்து வருவதையும் பார்க்கலாம் பெரும்பாலும் இந்த இதழில் கவிதைகளைப் படைத்து வரும் படைப்பாளிகளான ஷெல்லிதாசன், ஏ.எம்.எம். அலி, கு. ரஜீபன், ' எம்.எஸ். பாஹிரா. மா. புவிலக்ஷி, இனியவன், ஜே. பிரோஸ்கான வீரசொக்கன், கண. எதிர்வீரசிங்கம், நீலாபாலன், வி. கௌரிசங்கர், ந. டயாழினி. தி. பவித்திரன், ம. ஜெயமதிவதனி, வேல்நந்தன் இளையநிலா, ஜெ. யாழினி, சரோஜா இராமநாதன், வல்லான் ஆகியோர் இதில் பங்குகொண்டிருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் நல்லை அமிழ்தன், பி. கிருஷ்ணானந்தன், கே.ஆர். திருகதுவராஜா, பெரிய ஐங்கரன், க.யோகானந்தம், செ. ஞானராசா ஜெயா தமிழினி, என். நஸ்மி. என. சந்திரசேகன், ம. கம்சி ர. ஜோயஸ். ஜைரஸ், என், சர்மிலன், ஜெ. சரண்யா . கன்னி முத்து வெல்லபதியான், சூசை எட்வர்ட், கோபி ரமணன் எஸ். யுவன் ஆகியோரும் தரமான கவிதைகளைப் படைத்திருக்கிறார்கள். இவர்கள் எல்லோருமே தற்காலத்தில் கவிதை படைத்துவரும் எழுத்தாளர்களே. 'இவரைப்பற்றி' என்னும் எழுத்தாளர் அறிமுக பகுதியில் கன்னி முத்து வெல்லபதியான் மற்றும் இளைய நிலா எம்.டி.எம். யூனுஸ் ஆகியோர் அறிமுகப்படுத்தப்பட்டிருக் கிறார்கள்.

இது எழுத்தாளர்களுக்கு ஊக்கம் தரும் ஒன்று என்பதையும் குறிப்பிட வேண்டும்.கவிதை ஓர் இயக்கமும்கூட என்ற தலைப்பில் ஆசிரியர் குறிப்பை எழுதியுள்ள இதழாசிரியர் 'எந்தன் பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வேண்டும்' என்றவன் பாரதி. கவிதை தன்னெழுச்சி சார்ந்தது மட்டுமல்ல சமூகமாற்றங்களை வேண்டி நிற்கும் சிந்தனைகளை ஒன்று திரட்டித்தரக்கூடிய சக்தி வாய்ந்ததும்கூட.கவிதைத் துறைக்கு இன்றைய இளைய தலைமுறையினர் பலரின் வருகை மகிழ்ச்சி அளிக்கின்றது. குறிக்கோள் உள்ளதாக அவர்கள் கவிதைகள் அமைவது ஆரோக்கியமானது. ஒன்றைத் தெளிவாக விளங்கிக்கொள்வோம், வென்றெடுக்கும் சக்தி கவிதைக்கு உண்டு. அது ஓர் இயக்கமும் கூட என்று குறிப்பிட்டதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது. இரு மாதத்துக்கென மிகச் சிறிய அளவில் அடக்கமாக வெளிவரும் இவ்விதழின் முதல் 12 இதழ்களைத் தொகுத்து 'நீங்களும் எழுதலாம்' கவிதை இதழ் தொகுப்பு -1 என ஆசிரியர் அழகாகத் தொகுத்து வெளியிட்டிருப்பதும் மற்றுமொரு குறிப்பிடத்தக்க செயற்பாடாக உள்ளது. அவ்விதமே 'நீங்களும் எழுதலாம்' ஆண்டு 3இன் நிறைவாக... தகவும் தகவலும் -01 கவிதையும் கவிஞனும் என்ற நூலும் வெளியிடப்பட்டுள்ளது.

தொகுப்பு ஒன்றுக்கு பேராசிரியர் செ. யோகராசா அணிந்துரை வழங்கியிருக்கிறார். இதில் கவிஞர்கள் பலரது எழுத்து வீச்சினை பாராட்டியிருப்பதோடு மேலும் கவனிக்க வேண்டிய அம்சங்கள் குறித்தும் கருத்து தெரிவித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'..... எது எவ்வாறாயினும் 'நீங்களும் எழுதலாம்' இதழ் எஸ். சத்தியதேவன், தி. காயத்தரி, அருளானந்தி விஜயராஜ், ம. கம்ஷி. வே. சசிகலா, கோ. தர்ஷினி, வி. ஆர்திகா, சூ. யுவன், புவிலக்ஷி. பாரதிபுத்திரன், (தமிழேந்திரன்), வி. கௌரி ஷங்கர், பாவெல், ஜெனிதா மோகன், துஷாந்தி பரமநாதன் முதலிய இளைய தலை முறைக் கவிஞர்களை ஈழத்து நவீன கவிதை உலகிற்கு அறிமுகப்படுத்தியுள்ளது.

மேற்கூறியவர்கள் உட்பட வேறு சில கவிஞர்கள் இவ்விதழில் எழுதிவந்துள்ள, எழுதிவருகின்ற கவிதைகளில் கணிசமானவை, ஈழத்திலே புதுக்கவிதை தோற்றம் பெற்ற ஆரம்பக்கால கவிஞர்கள் பலரும் எழுதிய துணுக்குக் கவிதைகள் போல் அமையாமல், திருப்தி தருவனவாக அமைவது பாராட்டத் தக்கது' என்று கூறியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இவ்விதழ் அமைத்துக்கொடுத்த பயில்களம் மூலம் மாணவ மாணவிகள் பலரும் கருத்துச்செறிந்த கவிதைகள் பலவற்றை எழுதித் தம்மை இனங்காட்டியிருப்பது வரவேற்புக்குரியது. உதாரணமாக ஒரு கவிதையைப் பார்க்கலாம். படி என்ற தலைப்பில் ஒரு கவிதை. யாழ்ப்பாணம் கொடிகாமம் திருநாவுக்கரசு ம. வித்தியாலய மாணவி ந. டயாழினி எழுதிய இக்கவிதை. 2009 கார்த்திகை மார்கழி இதழில் வெளிவந்தது.

விடியும் வரை படி
படித்ததை திரும்பிப் படி
அடிவாங்கிப் படி
அதுதான் வாழ்க்கையின் ஏணிப்படி
கம்பஸ் படி தெரியப் படி
இலட்சியம் காக்கப் படி
போட்டி போட்டு படி
அது தான் வாழ்க்கையின் ஏற்றப்படி
பட்டங்கள் பல வாங்கப் படி
பட்டினி இருந்து படி
பல பஸ் ஏறிப் படி
பண்டிதன் ஆகப் படி
பணிவுடன் படி
தன்நம்பிக்கையுடன் படி
விடா முயற்சியுடன் படி
பதவியை அடையப் படி
அதுதான் வாழ்க்கையின் மேன்மைப்படி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றவாறாக அமைந்திருப்பது ஒரு மாணவரின் நோக்கில் நயக்கத்தக்கது.
'நீங்களும் எழுதலாம்' இதழ் சுமார் 120 பெண் கவிஞர்களுக்கு களம் அமைத்துக் கொடுத்திருப்பதையும் பார்க்க முடியும்.

அஸ்ரபா நூர்தீன், திருமதி டி. சுதாகினி, கிண்ணியா எஸ் பாயிசா அலி, எச்.எப். ரிஸ்னா, ரிம்ஸா முகமத், தம்பிலுவில் ஜெகா, எஸ் திலகவதி, சிவரமணி, ஜெ. யாழினி, (உப்புவெளி) லோ. ஜெயபிரதா, திருகோணமலை ஜெயா, தமிழினி உட்படப் பலர் தம் உள்ளக் கிடைக்கைகளை கவிதைகளாக வடிக்கின்றனர்.

அங்கே பல படைப்புகளில் பெண்ணியம் நுண்மையாகப் பாய்வதையும் குறிப்பிட வேண்டும். ஓர் உதாரணத்துக்கு சில நண்பர்களும் சில உறவினர்களும் இன்னும் சில நண்பர்களும் என்னும் தலைப்பில் அஸ்ரபா நூர்தீனால் எழுதப்பட்ட கவிதை நோக்கத்தக்கது (2009 வைகாசி - ஆனி)

**உனது
துன்பங்களின் வலி போக்கும்
வார்த்தை மருந்துடன்
உன் வீட்டில் நுழைவர்
மனித முகம் கொண்ட
சில வெறி நாய்கள்**

**பெண்ணே
உள்ளொன்றை வைத்துப்
புறமொன்றைப் பேசும்
இவர்களின்
அகங்களின் கொடூரத்தை
முகங்களில் படிக்கத் தெரியாப்
பாவியாய் வாழாதே
உன் சிறு பெண்ணுக்கும்
அரிச்சுவடி ஆரம்பிக்கும் போதே
இவர்களைப் பற்றி
அறிவையும் புகட்டு**

**மூலை முகடெங்கும்
நீலத்திரைக்குள்
மூழ்கிக் கிடக்கும்
வாலிபமும் வயோதிபமும்
தன் வெறி தீர்க்க
குறி நிமிர்த்தி அலைகிறது
வீடுகளில்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகளில்
பயணத்தில்
யாருமற்ற அனாதையாகி
ஆசிரமத்தில் இருக்கையிலும்
பச்சைக் குருத்துக்கள்
இச்சையுடன் தடவப்படுகின்றன
ஆகவே பெண்ணே !
வெட்கம் மறந்து
உன் சின்னப் பெண்ணுக்கும்
இந்த விசர் நாய்களின்
வெறித்தனம் பற்றிய
விளக்கத்தைச் சொல்'

என்பதும் ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது.

இன்றைய ஈழத்து சூழலில் ஒரு சிறு சஞ்சிகை நடத்துதல் என்பது மிகுந்த சிரமமான பணி. அத்தகைய சிரமமான பணியினை சோர்வில்லாமல் மேற்கொண்டு வரும் எஸ்.ஆர். தனபாலசிங்கம் அவர்களின் பணியினை நாம் பாராட்டுதல் வேண்டும் நீங்களும் எழுதலாம் கவிதை சஞ்சிகை ஈழத்துக் கவிதைச் சஞ்சிகைகளின் வரிசையில் கவனிக்க வேண்டிய சஞ்சிகை என்பது மறுப்பதற்கில்லை என்று 2008ம் ஆண்டு மல்லிகையில் மேமன்கவி தமது மதிப்புரையில் குறிப்பிட்டிருந்தார். 2022ம் ஆண்டு வரை நீங்களும் எழுதலாம் இதழ் சில வருடங்கள் வெளிவராதிருந்தபோதும், தொடர்ந்து வெளிவந்து கொண்டிருப்பதிலிருந்து அதன் மதிப்பையும் தாக்கத்தினையும் நாம் மேலும் உணர்ந்து கொள்ள முடியும். இவ்விதழ் தன்பணியை மேலும் சளைக்காமல் தொடரக் கவிதைப் பிரியர்கள் தொடர்ந்தும் தம் நல்லாதரவை வழங்க வேண்டும்.

rajadurai@thaiveedu.com



நன்றி - தாய்வீடு - மார்ச் இதழ் - கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலப்பொருத்தம் கருதிய மீள் பிரசுரம்

# எல்லாமுமாகுக

சகல படித்தான மௌனங்களும்
இதோ
உங்களைப் பேசவைக்கின்றன
எங்களுக்காய்
அட்சய பாத்திரங்களைப் பரிந்துரைக்கின்றீர்

ஒரே கல்லில் பல மாங்காய்களை
வீழ்த்தி விட்ட பூரிப்பில்
இனி
நீங்களே எல்லாமுமாகுக!

எங்கள் குரலாக
நீங்கள் ஒலிப்பீர்களாம்
அனைத்தையும் நிர்மூலமாக்கிவிட்டதான
நிம்மதிப் பெருமூச்சோடு
இனி
நீங்களே எல்லாமுமாகுக!

கன்னை பிரித்து
ஆடியதில்
கால்கள் நோவு கண்டிருந்தாலும்
கவனத்தை திருப்புவதில்
கவனமாய் செயற்பட்ட
கைங்கரியக் காரர்களே
இனி
நீங்களே எல்லாமுமாகுக!

"தெற்கிலோ வடக்கிலோ
இனி எதுவும்
எழும்பா
அந்தவழி இனி யாரும்
ஏறெடுத்தும் பாரார்
ஒரு பேச்சுக்கு தன்னும்
மூச்சு விடமாட்டார்" என
மனப்பால் குடிப்பவர்களே
எல்லாமுமாகுக
ஆம்! சற்றே காலம்!

**எஸ்.ஆர்.தனபாலசிங்கம்**

நீங்களும் எழுதலாம் - இதழ் - 16
மார்ச் - ஏப்ரல் 2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெல்

மரங்களை வளர்த்து
மழையை வெல்
மனங்களை வளர்த்து
மகிழ்ச்சியை வெல்
உலைகளை மூட்டி
உயிரை வெல்
கலைகளைத் தீட்டி
கவிதையை வெல்
மொழிகளைக் கற்று
உலகத்தை வெல்
களைகளைப் பிடுங்கி
விளைச்சலை வெல்
மனிதம் சுமந்து
மனிதனை வெல்

நல்லை அமிழ்தன்

பயில்களம்

## நினைவில் கொள்ளுங்கள்

துணிவு கொள்ளுங்கள்
துரத்தியவர்கள் எல்லாம்
நின்றுவிடுவார்கள்
பணிவு கொள்ளுங்கள்
இந்த உலகமே உங்களுக்கு
பணிந்துவிடும்
கனிவு கொள்ளுங்கள்
கல்நெஞ்சக்காரர்களும்
மாறிவிடுவார்கள்
நினைவில் கொள்ளுங்கள்
இவையனைத்தும்
நிதர்சனமானவை என்று.

கி.விஜோனஜிதன்
யா/ஹாட்லி கல்லூரி

**ஆழ்ந்த அஞ்சலி**

கல்வியியலாளர், **பேராசிரியர் சோ.சந்திரசேகரன்** மறைவிற்கு நீங்களும் எழுதலாமின் ஆழ்ந்த அஞ்சலிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிபெயர்ப்புக் கவிதை

# என் தெருவில் உலாவும் பைத்தியக்காரன்

சிரிப்புக்கள் மற்றும் புரியாத சொற்களில்
எனக்குப் பிடிபடாத கதைகள் சொல்லும்
என் தெருப் பைத்தியக்காரனைக் கேளுங்கள்
வாழ்வின் ரகசியத்தை
சிரிப்புக்களின் பொருளை
அவனிடம் கேளுங்கள்

அவன் சிரிப்புக்கள் மகிழ்ச்சிகளின்
சகுனங்கள்
அல்லது
எம்மை அச்சுறுத்தும் துன்ப
துயரங்களிலிருந்து
அழகைச் செதுக்க அவன் கற்றுள்ளானா?
உலர்ந்த உதடுகளூடு விசிறப்படும்
சிரிப்புக்கள்
அவன் முகத்தில் எழுதப்பட்டிருக்கும்
மர்மமான உணர்ச்சிகள்!

எங்களின் ஒரு பகுதியாக இருக்கும்
முகமூடிகளை அவன் இழந்து விட்டான்
தன் அம்மணமான முகத்தை அவன் காய்த்த
கால்கள் சுமக்கின்றன
எங்களைப் போலவே தனிமையின் கரைகளில்
அவன் இளைப்பாறுகிறான்
அன்பும் ஏமாற்றும் மேலோங்கும் ஒரு
விழாவில்
சமாதானமும் சிரிப்பும் அவனுக்கு
மோசடியாகத் தெரிகிறது
அவன் ஒவ்வொரு சிரிப்பும் ஆற்றாமையின்
ஓலம்!

ஆங்கில மூலம் - **Neeraj Nawaz**
தமிழில் : **சோ.பத்மநாதன்**

(ஜம்மு – காஷ்மீரைச் சேர்ந்தவர் நீரஜ் நவாஸ் வானொலி அறிவிப்பாளர், பிரதி எழுத்தாளர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வி.ஜீவகுமாரனின்
கடைக்குட்டியன்
(சிறுகதைத்தொகுதி)

பதிவு

## நூல் வெளியீடு

நீங்களும் எழுதலாம் வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் 08.04.2022இல் தி/உவர்மலை சமூகக் கற்கை வளநிலையத்தில் நீங்களும் எழுதலாம் ஆசிரியர் எஸ்.ஆர்.தனபாலசிங்கம் தலைமையில் இடம்பெற்றது. வரவேற்புரையை சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் வி.குணபாலாவும் விமர்சன உரைகளை சிரேஷ்ட ஊடகவியலாளர் திருமலை நவமும், சௌ.சந்திரகலா (ஆசிரியை) ஆகியோரும் நிகழ்த்தினர்.

முதற்பிரதியினை கவிஞர் சு.சிவசங்கரன் (ஆசிரியர்) பெற்றுக்கொண்டார். நூலாசிரியர் வி.ஜீவகுமாரன் ஏற்புரை நிகழ்த்தினார்.

## ஆழ்ந்த அஞ்சலிகள்
## தெணியான்

ஈழத்து முற்போக்கு எழுத்தாளர்களில் முக்கியமானவரான தெணியான் என்ற புனைபெயரால் அழைக்கப்படும் கந்தையா நடேசு 22.05.2022இல் (80 வயது) காலமானார். 1942.01.06ல் பொலிகண்டியில் பிறந்த தெணியான் 1964ல் விவேகி எனும் சிற்றிதழில் சிறுகதை எழுதியன் மூலம் இலக்கிய உலகில் பிரவேசித்தார்.

சிறுகதையாளர், நாவலாசிரியர், கட்டுரையாளர், விமர்சகர், சிறந்த மேடைப்பேச்சாளர் என இலக்கிய உலகில் தடம் பதித்த தெணியான் ஒரு சமூகப் போராளியுமாவார்.

இடதுசாரிச் சிந்தனையால் கவரப்பட்ட இவர் வடபுலத்து கம்யூனிஸ்ட் (மாஸ்கோ சார்பு) கட்சியின் முக்கியஸ்தராவர். டானியலின் வாரிசு எனக் கணிக்கப்பெற்ற தெணியான் முப்பது நூல்கள் வரை வெளிக்கொணர்ந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாகித்திய ரத்னா உட்பட பல விருதுகளைப் பெற்ற தெணியானின் மறைவையிட்டு நீங்களும் எழுதலாம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲▲

## சிரேஷ்ட சட்டத்தரணி ஆ.ஜெகசோதி

சிரேஷ்ட சட்டத்தரணி ஆ.ஜெகசோதி 18.03.2022இல் (73 வயது) காலமானார். சட்டத்துறையில் வல்லுநரான இவர் பல்வேறு சமூகநலப் பணிகளில் ஈடுபட்டதோடு கூடவே இலக்கிய ஆர்வலராகவும் விளங்கினார். இலக்கியவாதிகளுக்கு உதவிக்கரம் நீட்டுபவராகவும், நீங்களும் எழுதலாம் வாசகர் வட்டத்தின் உறுப்பினராகவும் பல நிகழ்வுகளில் சிறப்புப் பேச்சாளராகவும் செயற்பட்டவர். அன்னாரின் மறைவிற்கு நீங்களும் எழுதலாம் ஆழ்ந்த அஞ்சலிகளைத் தெரிவித்துக்கொள்கிறது.

## அன்னாரது நினைவேந்தலும் இதழ் 31 அறிமுக நிகழ்வும்

தி/உவர்மலை சமூகக் கற்கை வள நிலையத்தில் எஸ்.ஆர்.தனபாலசிங்கம் தலைமையில் 09.04.2022ல் நடைபெற்றது.

நினைவுரைகளை அதிபர் R.ஜெரோம் நீதிமன்றப் பதிவாளர் எம்.எஸ்.எம்.நியாஸ், சட்டத்தரணி தி.துஷ்யந்தன், சட்டத்தரணி எம்.சி.சபறுள்ளா ஆகியோர் ஆற்றினர்.

நீங்களும் எழுதலாம் இதழ் 31 பார்வையினை சம்பூர் எம்.சச்சிதானந்தம் (அதிபர்) ஆற்றினார். முதற்பிரதியினை எழுத்தாளர் சூசை எட்வேட் பெற்றுக்கொண்டார். கலாநிதி சரவணபவன், ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் ஒ.குலேந்திரன், கவிஞர் செ.ஞானராசா ஆகியோர் குறிப்புரை வழங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு தருணம்

விலகி ஓடாதீர் நண்பர்காள்,
விடியும் பொழுது நமதாக
முடிவைக் காணும் வழியொன்று
முன்னே தெரியுது ஒரு பொறியாக

பொறியைச் சரியாய் பொருளாக்கி
புரியும் விதத்தில் தெளிவாக்கி
நெறியை மாற்றும் முறைநோக்கி
நின்றால் நிலைமை மாறாதோ

வீணே அலட்சியம் கொள்ளாதீர்
வெறுப்பைக் கொட்டி உமிழாதீர்
ஏனோ அங்கவர் கொதித்தெழுந்தார்
எண்ணெண்ணில் அதுவே முறையாகும்

எந்தப் பொறியிலும் ஓர் ஒளியுண்டு
எதற்கும் முற்போக்குக் குணமுண்டு
அந்த வழியை நாம் உணர்த்தி
அணுகின் அதனாற் பயனுண்டு

காலம் தானாய் கனிவதில்லை
கதவுகள் தானே திறப்பதில்லை
சொல்லி எதுவும் வருவதில்லை
எனுமியங்கியல் ஏனோ புரிவதில்லை

ஒன்றாய் இணைய ஒரு தருணம்
உண்டாய் ஆன இப்போதில்
நன்றே நினைந்து செயற்பட்டால்
வென்றே விடலாம் விடிவுதனை

- எஸ்.ஆர்.தனபாலசிங்கம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலமும் பெயர்ப்பும்

# This Crop of Hops, O Friends

Faiz Ahmed Faiz

Cut them all, these wounded plants;
Don't leave them, whining, withered.
Pluck them all, these pained buds;
Don't leave them, writhing on the
branch.

This crop of hopes, O friend,
Will, this time, too, be ruined.
All of days' and nights' labour
Will, again, bear no fruit.

In the field's crannies and cracks
Spread again the compost – your
blood.
Again, water the soil – with your tears.
Again, plan for the next crop.

Plan for the next crop
When, again, we must suffer ruin.
If just one crop ripens, we shall
have enough.
Till then, we must try again... and
again.....

1953



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நண்பர்களே! இந்த நம்பிக்கைப் பயிர்

**Fயிஸ் அஹ்மட் Fயிஸ்**

நோயுண்ட இச் செடிகள் யாவையும்
வெட்டுவீர்;
சிணுங்கி வாடியவாறு அவற்றை
விடாதீர் ;
நோவுண்ட இம் மொட்டுக்கள்
யாவையும் கொய்வீர் ;
கிளைகளில் வாடியவாறு அவற்றை
விட ாதீர்;

நண்பனே, இந்த நம்பிக்கைப் பயிர்
இம்முறையும் பாழாகும்
இரவும் பகலுமான உழைப்பு யாவும்
மீண்டும் பயன் தரா.

வயலின் பிளவுகளிலும்
வெடிப்புகளிலும்
மீண்டும் பரவும் உரம் - உன் உதிரம்.
மீண்டும் மண்ணுக்கு நீரூற்று — உன்
கண்ணீரால்
மீண்டும் மறு பயிருக்குத் திட்டமிடு.

மீண்டும் நாம் பாழை அனுபவிக்க
மறு பயிருக்குத் திட்டமிடு.
ஒரேயொரு பயிரே முதிரினும்
நமக்கது போதும்
அதுவரை நாம் மீள முயல வேண்டும்...
மீள...மீள

- சி.சிவசேகரம்

ISSN 1800-3311



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org